Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
Jaffna.
T. Phone: 23794

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சுடர் 5: பிரமோதூத ஞு சித்திரை மீ 9 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 25 (22-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 66

## ★யாழ் மாவட்டத்தில்
# பயிலுநர் ஆசிரியர் தெரிவுகள் குறித்து மீள் பரிசீலனை!

## தில்லுமுல்லுகளைக் கண்டறியக் குழு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ். மாவட்டத்தில் இருந்து அண்மையில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 58 பேரினது விண்ணப்பங்களும், இப்பதவிக்கு மனுச் செய்து தெரிவாகாதவர்களது விண்ணப்பங்களும் முழு அளவில் மீள் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றன.

இந்தத் தெரிவுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தில்லு, முல்லுகள் குறித்து விசாரிக்க ஐந்து பேர் கொண்ட விசேட குழு ஒன்றும் நியமிக்கப்படவிருக்கிறது.

கல்வித் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற பயிலுநர் ஆசிரியர் தெரிவுகள் குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்தத் தெரிவின் போது சான்றிதழ்கள் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளுக்குபுள்ளிகள் ஒதுக்கப்பட்ட விதம் குறித்து முழு அளவில் விசாரணை நடத்தப்படும் என்றும்—

அதனடிப்படையில் தெரிவு செய்யப்படுவோர் பட்டியல் மீளமைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

தற்போது நியமனம் பெற்றவர்களின் விண்ணப்பங்கள் விசேடமாகப் பரிசீலிக்கப்பட்டு தகுதியற்றவர்கள் விலக்கப்படுவர் என்றும்—

விலக்கப்படுவோரின் இடத்துக்கு தகுதியான புதியவர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பயிலுநர் ஆசிரியர் தெரிவுகளுக்குப் பொறுப்பான கல்வித் திணைக்கள உயரதிகாரி தற்போது லீவில் வெளிநாடு சென்றிருப்பதாகவும்—

அவர் நாடு திரும்பிய கையோடு மீள் பரிசீலனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவந்தது. (உ-ஓ-9)

முச்சந்தி முரளி



அப்ப......! தெரிவுசெய்யப்பட்ட வாத்திமாரின்ரை வயித்திலை நெருப்பை அள்ளிக் கொட்டின மாதிரி இருக்குமெண்டு சொல்லுங்கோவன்......!

## இந்திய அமைச்சரவை விஸ்தரிப்பு

புதுடில்லி, ஏப் 22

இந்திய மத்திய அமைச்சரவை நேற்று விஸ்தரிக்கப்பட்டது.

புதிதாக 18பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவர்களில் 13பேர் இணை அமைச்சர்கள். 5 பேர் துணை அமைச்சர்கள் ஆவர். (ஒ-எ)

# திடீர் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு முயற்சி?

## ஏற்பாடுகள் நடைபெறுவதாக தகவல்

கொழும்பு, ஏப்ரல் 22

திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி பிரேமதாஸா தயாராகி வருகிறார் போல் தெரிவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள் அடங்கிய கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா பேசினார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் முப்படைகளின் தளபதிகள், பொலீஸ்மா அதிபர் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக் கூட்டத்தில் ஜனாதிபதி பேசிய பேச்சிலேயே இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் அப்பேச்சு வருமாறு:-

வறுமை ஒழித்து மக்களின் துன்பத்தை அகற்றுவதற்கு அமைச்சர்கள் தங்களை அர்ப்பணிப்புச் செய்யவேண்டும். அப்படியில்லாவிட்டால் இன்னொரு வருடம்வரை பொறுத்து இருக்காமல் குதிரைகளை மாற்றி விடுவேன்.

இதுவும் அர்த்தமுள்ள முடிவுகளைக் கொண்டுவராவிட்டால் நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டு மக்களி

[5 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான யாத்திரை அ'புரவிலிருந்து வவுனியாவுக்கு!

## ஆயிரம் பேர் பங்குபற்றுவர்!!

வவுனியா ஏப் 22

அநுரதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமேல் மாகாண சபையின் உறுப்பினர் திரு. ரி.டி. திசநாயக வவுனியா வந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. தினேஷ் உடன் இது தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சுமார் ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த சமாதான யாத்திரை மே மாதம் 3 ஆம் திகதி அநுராதபுரம் மகாபோதியில் உள்ள பௌத்த விகாரையில் ஆரம்பித்து 7ஆம் திகதி வவுனியா வந்தடையத் திட்டமிடப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் மேற்கொண்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

ஞாயிற்றுக்கிழமை சித்திரை 9
22-04-1990

சுபநேரம்:
09-01 முதல் 10-31 வரை

இராகுகாலம்
04-31 முதல் 06-01 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## யாழ் ஆஸ்பத்திரியில் "எய்ட்ஸ்" நோயாளி?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளி ஒருவருக்கு ''எய்ட்ஸ்'' நோய் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவரது இரத்தம் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே இந்த நோயாளி ''எய்ட்ஸ்'' கிருமிகளினால் பீடிக்கப்பட்டிருக்கிறாரா என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நோயாளி பங்களாதேசில் சில காலம் தங்கியிருந்தவர் என்றும்-

அவ்வேளை இவர் 'எய்ட்ஸ்' தொற்றுக்கு ஆளாகி இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் தங்கியிருந்த போது தாம் நடந்து கொண்ட விதம் குறித்து ஆஸ்பத்திரி வட்டாரங்களிடம் இந்த நோயாளி ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

''எய்ட்ஸ்'' நோய்க்கான அறிகுறிகள் அதிகளவில் இந்த நோயாளியில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## குடாநாட்டில் நேரடியாக பொருள்கள் இறக்குமதி!

யாழ்ப்பாணம், ஏப் 22

இந்தியா, மாலைதீவு போன்ற அயல்நாடுகளிலிருந்து நேரடியாக யாழ். குடாநாட்டுக்கு பொருள்களை இறக்குமதி செய்ய மீண்டும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அயல் நாடுகளிலிருந்து சிறு கப்பல்கள் மற்றும் பாய் கப்பல்கள் மூலம் முன்னர் வடபகுதிக்கு பொருள்கள் கொண்டு வரப்பட்டன.

பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்களை அடுத்து வடபகுதியில் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டது.

ஆனால் நேற்று முன்தினம் முதல் வெளிநாடுகளிலிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு இங்கு வரும் சிறு கப்பல்கள், மற்றும் பாய் கப்பல்கள் ஊர்காவற்துறையில் கரை ஒதுங்கவும் பொருள்களை இறக்கவும், அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. (உ-9)

# தமிழக மீனவரைக் கைது செய்து வீண் பரபரப்பு ஏற்படுத்தாதீர்!

## தமிழக முதல்வர் கோரிக்கை

சென்னை ஏப் 22

இலங்கை கடல் பகுதிக்குச் சென்று வரும் தமிழக மீனவர்களை அங்கேயே விட்டு விடாமல் கைது செய்து பரபரப்பை ஏற்படுத்துவது நல்லதல்ல என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

எதிர் கட்சித் தலைவர் தீர்மானம் ஒன்றை ஒட்டிப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது காணாமல் போனதாகக் கூறப்படும் இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கையின் பேசாலையில் இருப்பதாகவும் -

அவர்கள் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று நேற்று முன்தினம் தமக்கு தகவல் வந்துள்ளதாகவும் -

கடல் கொந்தளிப்புக் காரணமாக அவர்கள் திரும்புவது தாமதம் ஆகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கடல் எல்லைக்குள் செல்லும் தமிழக மீனவர்களை அங்கேயே எச்சரித்து விட்டுவிடாமல் கைது செய்து பரபரப்பு ஏற்படுத்துவது நல்லதல்ல.

இரு நாட்டு கடல் எல்லை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று உலகம் முழுவதிலும் பூமி தினம் அனுஷ்டிப்பு

இன்று ஏப்ரல் 22 ஆம் திகதி பூமி தினத்தை சுமார் 120 நாடுகளும் உலகின் பல்வேறு அமைப்புகளும் அனுசரிக்கின்றன.

பூமி தினம் முதல் தடவையாக 1970 ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.

இலங்கையில் மத்தியசூழல் அதிகாரசபை இவ்வாண்டு பூமி தினத்தை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி இருக்கிறது.

பூமி தினத்தை அனுஷ்டிக்கும் நோக்கம் பூமியில் அபாய நிலையில் உள்ள சுற்றாடலை மையமாகக்கொண்டு பூமியில் முக்கிய அலகுகளாக உள்ள மனிதனும் இயற்கையும் உலகில் சேர்ந்து வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். (க)

## பேசாலையில் தமிழக மீனவர்

கொழும்பு ஏப் 22

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 57 மீனவர்களும் பேசாலை பாத்திமா மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு 12 இயந்திர மீன்பிடிப் படகுகளில் தலை மன்னார்க் கடற் பகுதிக்குள் நுழைந்த போதுஇவர்கள்பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## சாயி பாபாவை சந்தித்து சில மணிகளில் இறைபதம்!

### எச். டபிள்யூவுக்கு கிடைத்த பேறு!!

பெங்களூர் ஏப் 22

இறப்பதற்குச் சில மணித்தியாலங்களுக்குமுன்னர்தான் டாக்டர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா பெங்களூரில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களைச் சந்தித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அப்போது பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைச்சந்தித்தார்.

இச் சந்திப்பின் பின்னர் நெஞ்சு நோவினால் அவஸ்தைப்பட்ட டாக்டர் ஜெயவர்த்தனா, பெங்களூர் ஜெயதேவா மார்பு நோய் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

## வடபகுதி சுங்கப் பிரிவுகள் இயங்க ஆரம்பித்தன

யாழ்ப்பாணம் ஏப் 22

சுங்கத் திணைக்களத்தின் வடபகுதிப் பிரிவுகள் கடந்த 20ஆம் திகதி முதல் மீண்டும் தமது வழமையான கடமைகளை ஆரம்பித்துள்ளன.

தலை மன்னாரில் உள்ள பிரிவுக்கு உதவி சுங்க அத்தியட்சகர் திரு. கே. எஸ். அருளானந்தையா பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சுங்கப் பிரிவு சுங்க இன்ஸ்பெக்டர் திரு. வி. சரவணன் தலைமையில் இயங்குகின்றது.

காரைநகர் இறங்கு துறையில் உள்ள சுங்கப் பிரிவுக்கு சுங்க இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் சுங்க அத்தியட்சகர் திரு.கே. ராஜரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் பருத்தித்துறை வல்வெட்டித்துறைப் பகுதிகளிலும் சுங்க அலுவலகங்களைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-9)

## மாங்குளத்தில் மீண்டும் புதனன்று நகை மீளளிப்பு!

மாங்குளம் மக்கள் வங்கியில் அடகு வைத்த பின்னர் பணம் செலுத்தியும் நகைகளை மீளப்பெற்றுக் கொள்ளாதோருக்கு அந்த நகைகள் இம்மாதம் 25 ஆம் திகதி மீளளிக்கப்படும்.

1989 செப்டெம்பர் 22 ஆம் திகதிவரை நகைகளை மீளப் பெற பணம் செலுத்தியவர்களுக்கு கடந்த 19, 20, 21 ஆம் திகதிகளில் நகைகள் மீளளிக்கப்பட்டன.

இத் திகதிகளில் அவற்றைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கும் நடவடிக்கையாகவே புதனன்று நகை மீளளிப்பு மீண்டும் நடக்கவிருக்கிறது. (உ-94)

## நோன்பு திறக்கும் நேரம்

22. 4. 90
ஸஹர் முடிவு — 4.25
நோன்பு திறக்கும் நேரம் — 6.20

## புங்குடுதீவு பாடசாலைகள் நாளை திறக்கப்படுகின்றன

புங்குடுதீவு, ஏப் 22

புங்குடுதீவுப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக ஒரு கிழமைமுன்னதாகவே -நாளை திங்கட்கிழமை திறக்கப்படுகின்றன.

முதலாந் தவணையில் பூர்த்திசெய்யப்படாத பாடத்திட்டங்களையும் மற்றும் செயற்பாடுகளையும் முடிப்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. அ. செ. நல்லையா தெரிவித்தார். [ஒ]

## இலங்கையிலா? மாலைதீவிலா?

## சார்க் மாநாடு நடத்துவது குறித்து இழுபறி நிலை!

கொழும்பு, ஏப். 22

சார்க் உச்சி மாநாட்டை இலங்கையிலா அல்லது மாலைதீவிலா நடத்துவது என்பதை அந்த இரு நாடுகளுமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் இப்போது கூறிவிட்டது.

இலங்கை தவிர்ந்த ஏனைய சார்க் நாடுகள் இம்முறை உச்சி மாநாட்டை மாலைதீவில் நடத்துவது என்பதில் கருத்து உடன்பாடு கண்டன.

ஆனால் இலங்கை இதற்கு ஒத்துவரவில்லை.

25 ஆவது சுதந்திரதின ஆண்டாக இந்த வருடத்தை மாலைதீவு அரசு கொண்டாட இருக்கிறது. அதனால் உச்சி மாநாட்டை மாலைதீவில் நடத்த வேண்டும் என்பதில் அந்நாடு விடாப்பிடியாக உள்ளது.

மாலைதீவில் உச்சி மாநாடு நடத்தப்பட்டால் அதில் இலங்கை கலந்து கொள்ள மாட்டாது என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் கூறிவிட்டனர்.

[5 ஆம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கறுப்பு நிற அல்சேஷன் (German Shepherd)நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. தில்லைநாதன் 64/1 வைமன் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (உப மின் நிலையம் முன்பாக)(12364)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பொலீஸ் நிலைய முன் ஒழுங்கையில் 4 பரப்பு காணியும் மின்சார வசதி.நீர்த்தாங்கி கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அன்ரன் பொன்மலர், 4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (3295)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர் தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப்/டிசம்பர்1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### For Sale

Belling Compact Auto Deluxe Electric Cooker, Coffee Maker, Coffee Per-colator, Conning Ware, Pyrex, Necchi 554, Honda C 90, Etc. First reasonable -Offer Contact: Mather, Lawton Road, Manipay (Near Hindu College) (3294)

### தேவை

யாழ் நகரில் பிரத்தியோக வகுப்பு நடத்தும் ஆசிரியருக்கு ஒரு பெண் உதவியாளர் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். இல.121 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12360).

### தேவை

Fridge வேலை தீவைண்டிங் வேலை பழக ஆர்வமுள்ளவர்கள் உடன் தேவை ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3286)

### மணமகள் தேவை

யாழ். உயர் வேளாள குலத்தில் பிறந்தவரும் மேல் நாட்டில் படித்து கனடாவில் நிரந்தரமாக உயர் உத்தியோகம் வகிப்பவரும் செவ்வாய் குற்றமில்லாதவருமான அழகிய 30 வயது நிரம்பிய ஒரே ஒரு பிள்ளைக்கு படித்த அழகிய நல்ல நிறமுள்ள 25 வயது வரையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் தேவை. தொடர்பு 538, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (12359)

### மணமகன் தேவை

அந்தணர் குல 32 வயது 7 இல் செவ்வாய் உடைய மணமகளுக்கு அதே இன மணமகன் தேவை. கணிசமான சீதனம் வழங்கப்படும். உள்ளூர் விரும்பத்தக்கது. தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். No. 679 C/o உதயன். (3293)

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தின் இருகாலப் பூசைக்கு பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை வீட்டு வசதி உண்டு தருமகர்த்தா அராலி மேற்கு. வட்டுக்கோட்டை. (3296)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Lohmann) பிறவுண் சேவல் தனிக் கறுப்பு, சிகப்பு நிற சேவல், (பிலிமத்) கறுப்பு வரி சேவல், புறொயிலர் வான் கோழிக் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் (25-4-1990) புதன் கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க இல.9, கந்தையா லேன், சுன்னாகம்.(புகையிரத நிலையத்துக்கு அருகில்) (3279)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nall-ur FarmCenter 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3216)

### தவறிவிட்டது

620264229V இலக்கங் கொண்ட அடையாள அட்டை பொலீஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து P. நாகேஸ்வரா மே/பா K. V. தங்கராசா பழைய றோட் கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரிக்கோ அன்றி உதயன் காரியாலயத்துக்கோ அறிவிக்கவும். (12940)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடம்

இப் பல்கலைக் கழகத்தில் கீழ் வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 17-05-1990 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவி:**
சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் III

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 2085-10x40-7x50-2835/-
(மாதமொன்றுக்கு)
(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்.)

**தகைமைகள்:**
1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் தமிழ் மொழி அல்லது இலக்கியம் அடங்கியிருத்தல் வேண்டும்.
2. தமிழ்ச் சுருக்கெழுத்தில் பின்வரும் ஆகக் குறைந்த வேகத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
சுருக்கெழுத்து - நிமிடமொன்றுக்கு -70சொற்கள்.
தட்டச்சில் பொறித்தல் -நிமிடமொன்றுக்கு - 20 சொற்கள்.

**வயது:**
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**
தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

**குறிப்பு:**
ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சுருக்கெழுத்துத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23x10 செ. மீ. அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெறவிரும்புவோர் இப் பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
18 (4 1990

[சி 4315]

### WANTED PHARMACIST

Wanted a well experience PHARMACIST for a leading Medical Stores in Jaffna Town. Apply with Particulars. No: 677, C/o Uthayan. (3280)

### புதிய வகுப்புகள்

25-4-90 பி. ப. 3 மணிக்கு S. ஜேம்ஸின் Spoken English வகுப்புகளும் S.K. ஜீவமோகனின் 9, 10, 11 ஆண்டுகளுக்குரிய கணித வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. தொடர்பு: "A" லெவல் சென்ரர், மணல்தறை லேன் கந்தர்மடம். (3292)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17 மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

### Spoken English

Practice Makes Perfect Series 1-7ஆங்கிலம் வாசித்து விளங்கப் பேசஎழுதஉதவும் கைநூல்கள் தயாரிப்பு S. B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (12319)

## வருடாந்த விளை.போட்டி

யாழ்ப்பாணம், ஏப்-22 கைதடி கிழக்கு இந்து இளைஞர் சங்க வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கைதடி நாவற்குழிப் பொறுப்பாளர் திரு.அப்பன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ)

# தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையை தீயசக்திகள் குலைக்க முயலுகின்றன

## நிலாவெளி இக்பால் நகரில் மாத்தயா எச்சரிக்கை

திருகோணமலை ஏப் 22 "வடக்கு கிழக்குப் பிரதேசம் தமிழ்- முஸ்லிம் மக்களின் தாயகப் பிரதேசம், நீண்ட நெடுங்காலமாக தமிழ்- முஸ்லீம் மக்கள் இங்கு சேர்ந்தே வாழ்ந்து வருகிறார்கள். சில தீய சக்திகள் எதிரிகளுக்குச் சார்பாக நின்று தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைப் பிரிக்க முற்படுகின்றனர். இதனையிட்டு முஸ்லீம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்"

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) 17ஆம் திகதி மாலை நிலாவெளி- இக்பால் நகர் என்னும் முஸ்லீம் கிராமத்தில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.

முஸ்லீம் மக்களால் ஒழுங்கு செயயப்பட்ட இந்தக் கூட்டத்தில் அயல் கிராமங்களிலிருந்தும் பெரும் திரளாக மக்கள் கலந்து கொண்டனர்.

திரு. மாத்தயா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

கடந்த காலங்களில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் செய்த உதவிகளை நாங்கள் மறந்துவிடவில்லை. விடுதலைப் புலிகளையும் மக்களையும் பிரிப்பதற்கு எதிரிகளால் மேற்கொண்ட சதி முயற்சி பலனளிக்கவில்லை. மாறாக இந்த இயக்கம் மேலும் வளர்ந்துவிட்டது இதற்குக் காரணம் மக்கள் காட்டிய ஆதரவே ஆகும்.

வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் பூர்வீகத் தாயகம். தமிழ்- முஸ்லீம் மக்களின் தோழமை, சகோதரத்துவம் மேலும் வளர வேண்டும். எமது ஒற்றுமையின் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. காசிஆனந்தன் உரையாற்றியபோது கூறியதாவது:

நாம் நீண்ட விடுதலைப் போராட்ட வரலாற்றைக் கொண்டவர்கள். எமது விடுதலைப் போராட்டம் மேலும் தொடரவுள்ளது. எமது மண்ணில் அந்நியப் படை ஆக்கிரமிப்பை நாம் எப்போதும் எதிர்த்தே வந்துள்ளோம்.

போத்துக்கேயர் வந்தபோது அந்த அந்நியப் படையை எதிர்த்து சங்கிலியன் போராடி மடிந்தான். ஒல்லாந்தர் படை வந்தபோது நல்லச்சி என்னும் பெண் அதனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தாள். பிரித்தானியர் வந்தபோது அதனை எதிர்த்து பண்டாரவன்னியன் போராடி மடிந்தான்.

இந்தியப்படை வந்தபோது அதனை தலைவர் பிரபாகரன் எதிர்த்து போராடினார். ஆனால் மடியவில்லை. இந்தியப்படையை ஓட ஓட

[5 ஆம் பக்கம் பார்க்கா]

# மக்கள் முன்னணி தலைவருக்கு மகத்தான வரவேற்பு

திருகோணமலை, ஏப் 22 தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) வுக்கு புல்மோட்டை முதல் இக்பால் நகர் வரையிலுள்ள கிராம மக்கள் அணிதிரண்டு மகத்தான வரவேற்பளித்தனர்.

திரு. மாத்தயாவும் ஏனைய புலிப்படையினரும் புல்மோட்டைக்கு வந்தபோது முஸ்லிம் மக்கள் பெருவாரியாகத் திரண்டு மாலைகள் அணிவித்து கும்மி அடித்து வரவேற்றனர்.

அங்கிருந்து புறப்பட்ட குழுவினரை வழிநெடுக மக்கள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

குச்சவெளி, கும்புறுப்பிட்டி, களைப்பைஆறு கோபாலபுரம், நிலாவெளி, இக்பால் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமக்கள் பெரும் திரளாக வீதியில் நின்று மாலைகள் அணிவித்து வரவேற்றனர். வீதிகள் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

திரு. மாத்தையாவுடன், திரு. காசிஆனந்தன், விடுதலைப்புலிகளின் மகளிர் அணித் தலைவி, செல்வி. சுந்தரி உட்பட பல போராளிகள் ஊர்வலத்தில் வந்தனர். இதனையடுத்து இக்பால் நகர் விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (க-150)

# இன்றைய காலகட்டத்தில் விபுலானந்தர்பாதைசிறப்பானது

கொழும்புத்துறை ஏப்22 முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் காட்டியது இன்றைய காலகட்டத்தில் மிகச் சிறப்பான பாதை. இறைபக்தி, இயல், இசை, நாடக வளர்ச்சியில் அவரது ஆற்றலும் சமயப் பணிகளும் புனிதமானவை.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற சுவாமி விபுலானந்தர் ஜனன தின வைபத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

சைவப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன், செயலாளர் திரு. சி. சி. வரதராசா ஆகியோரும் பேசினர். (இ30)

## லெனின் தினம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22 மாமேதை லெனின் நினைவு தினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள பொன். குமாரசாமி நூலக மண்டபத்தில் நடைபெறும். (க)

## பச்சை இல்லம் முதலிடம்

நாவலடி உடுப்பிட்டி மாணவர் மன்றம் நவஜீவன விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து நடத்திய இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த புத்தாண்டுத் தினத்தன்றும் அதற்கு மறுநாளும் நடைபெற்றன.

போட்டிகளில் செல்வன் கே. மனோகரன் தலைமையில் பச்சை இல்லம் முதலிடம் பெற்றது. (இ-ப)

## நாச்சிமார் கோவில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஏப் 22 வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா 25 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும். (ச)

## முதலாம் ஆண்டு திதியும் நினைவஞ்சலியும்
22 — 04 — 1990



### ஆ. பஞ்சலிங்கம்
(விற்பனை திணைக்களம், கிளிநொச்சி)

மண்ணில் தாயின் வீட்டுக்கு: 05 - 02 - 1947
துரோகிகளின் வேட்டுக்கு: 02 - 05 - 1989

அன்பின், பண்பின், பாசத்தின் திருவுருவாய், சிந்தை கவர்ந்து, யாவரும் உன் புகழ் பாட வாழ்ந்திட்டாய். இப்பாரினில் யாவரும் உன் சேவைகளை மறந்ததில்லை. எங்களைப் பிரிந்து ஓராண்டாயினும், உன் பிரிவால் சதா கண்ணீர் வடிக்கிறோம். உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார்,
மருமக்கள், மாமா, மாமி, மச்சாள்மார்,
சகலன்மார், பெறாமக்கள்.

S. A. பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய தபால் அதிபர் - ஹற்றன்)
"அன்னவாசா"
பூதராயர் கோவில் ஒழுங்கை,
பிரதான வீதி, பருத்தித்துறை. [3332]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

**பொருள்:**

அனிச்சப்பூவே! நல்ல மென்மைத் தன்மை பெற்றிருக்கின்றாய்; நீ வாழ்க! யாம் விரும்பும் காதலி உன்னை விட மெல்லிய தன்மை உடையவள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
22 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

# அரசியலில் இளைஞர்

அரசியலில் இளைஞர்களுக்கு உரிய இடம் அளிக்க சில வசதிகளைச் செய்யப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையினர் இளைஞர்களாக இருக்க வகை செய்வது என்பது அமைச்சரவையின்—அரசின்—முடிவு. உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இதற்குரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

உத்தேச திட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சியும், தனது வேட்பாளர்களில் 40 சதவீதம் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் சம்பந்தப்பட்ட கட்சியின் வேட்பாளர் பட்டியல் முழுவதுமே ரத்தாகும். இளைஞர்கள் எனப்படுவோர் 18 வயதிற்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று வரைவிலக்கணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் விவகாரம் பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்த சிபார்சுகளின் அடிப்படையில், அரசாங்கம் இந்தப் புதிய திட்டத்தை வகுத்துள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவக் குழுவின் பரிசீலனை, கருத்து உடன்பாடு, அங்கீகாரம் ஆகியவற்றின் பின்னர் இது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியலில் இளைஞர்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் கட்சிகள் கருத்து உடன்பாடு கண்டிருப்பது இதுவரை விட்ட தவறை எல்லோரும் உணர்ந்துள்ளார்கள் என்பதையே காட்டுகிறது.

இளைஞர்கள் சமுதாயத்தின் இருதயம் போன்றவர்கள். அவர்களின் ஆற்றல், திறமை, சக்தி என்பன நாட்டு வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். கல்வி, கலை, கலாசாரம் பொருளாதாரம், தொழில்நுட்பம் உட்பட சகல துறைகளிலும் அவர்களின் பங்களிப்புப் பிரதானமாகும். அது போலவே அரசியலிலும், நாட்டை நிர்வகிப்பதிலும் அவர்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது.

ஆனால் இதுவரை காலமும் அரசியலிலும், ஆட்சி நிர்வாகத்திலும் இளைஞர்களுக்கு உரிய பங்கு வழங்கப்படவில்லை. இளைஞர்களின் பங்களிப்புக் கட்டாயப்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக இளைஞர்களின் புதிய கருத்துக்களுக்கும், சிந்தனைகளுக்கும், அபிலாசைகளுக்கும் வேண்டிய மதிப்பளிக்கப்படவில்லை.

சட்டரீதியாகவும், நடைமுறையிலும் அரசியல்துறையில் இளைஞர்களுக்கு உரிய பங்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் இளம் சந்ததியினர் மத்தியில் விரக்தியும், வன்மமும், மன உளைச்சலும் மலியத் தொடங்கிற்று. அதன் பெறுபேறாக அவர்கள் சனநாயகத்தையும், நேர்வழியையும் புறத்தே வைத்து, எழுச்சி கொள்ளத் தொடங்கினர். அந்த எழுச்சி நாளடைவில், புரட்சியாகவும், வன்செயல் வழியாகவும் மாறியது.

பழைய தலைமுறையினரே அரசியலிலும், ஆட்சி நிர்வாகத்திலும் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவை இளைஞரால் தீண்டப்படக் கூடாத, வயதான பரம்பரையினரின் தனிச் சொத்தாக, ஏகபோக உரிமையாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கஞ்சிக்குள் பயறு சேர்த்த மாதிரிக் கூட அரசியல்துறையில் இளைஞருக்குப் பங்கு தரப்படவில்லை.

அதன் பாதகமான விளைவுகளை நாடு இப்போது அனுபவித்து வருகிறது. மூத்த தலைமுறையினர் விட்ட பெருந்தவறு. நாட்டின் கட்டமைப்பையே குலைத்து விட்டதைக் காண்கிறோம். சந்ததி இடைவெளியால், பரம்பரை நீக்கத்தினால், சித்தாந்த மோதல்கள், கருத்து மோதல்கள், வாழ்க்கை முறை முரண்பாடுகள், சிக்கல்கள், மன வேறுபாடுகள், நடைமுறைப் பிரச்சினைகள் என்பன உண்டாவது இயற்கையானதே.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி; சமூக வாழ்க்கையிலும் சரி, மூத்தவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையில், வயதானவர்களுக்கும் வயது குறைந்தவர்களுக்கும் இடையில், நெருக்கமும் உறவும் தேவை. இரு சாராரும் நெடுந்தூர முனைகளாகப் பிரிந்து விட்டால் அதனால் எண்ணில்லாப் பிரச்சினைகள் தோன்றும். இதனை உய்த்து உணராமல் இளம் சந்ததியினரை அரசியலில் ஓரம் ஒதுக்கியதால் பல அனர்த்தங்கள் நிகழ்ந்து விட்டன.

அரசியல் தமது தனியுடைமை, அரசாட்சி தமக்கே பிரத்தியேகமானது என்று இறுமாந்திருந்த மூத்த சந்ததியினர் பாடம் படித்துவிட்டனர் என்பதை புதிய திட்டம் உணர்த்துகிறது. அவர்கள் காலம் பிந்தியாவது சரியான திசைக்குத் திரும்பி இருப்பது நாட்டின் எதிர்காலமாவது ஒளிமயமாக விளங்க உதவும் என நம்பலாம்.

இளைஞருக்கு அரசியலில் உரிய பங்கு உள்ளூராட்சி மட்டத்தில் மட்டுமன்றி உயர் தேசிய மட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அவ்வேளை இளைஞர்கள் தமது பங்கைப் பயனுள்ளதாக்கும் விதத்தில் பொறுப்புடனும், முதிர்ச்சி நோக்கியும் செயற்படுவது அவசியம்.

# வவுனியா விவசாய கல்லூரிக்கு மினி விஞ்ஞான கூடம்

வவுனியாவில் உள்ள விவசாயக் கல்லூரிக்கு மினிவிஞ்ஞான கூடம் ஒன்றை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் உறுதி அளித்துள்ளார்.

சமீபத்தில் இக்கல்லூரிக்கு விஜயம் செய்த அவரிடம் கல்லூரி அதிபர் திரு. எஸ். இராஜதுரை வேண்டுகோள் விடுத்த போதே அவர் இந்த உறுதியை அளித்தார்.

ஆராய்ச்சிப்பிரிவுடன் கூடிய ஒரு சிறந்த கல்லூரியாக அதனை உருவாக்குவதற்கும், மாணவர்களின் கல்வித்தேவைக்கும் இந்த விஞ்ஞான ஆய்வு கூடம் மிக அவசியமாகத் தேவைப்படுவதாக அதிகாரிகள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர். (இ-164)

## சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப் 22

தாகம் வெளியீட்டகம் நடத்தும் சித்ரா நாகநாதன் எழுதிய கிராமத்து மண்கள் சிவக்கின்றன என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு முற்பகல் 9.30 மணிக்கு திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

புதுவைச் செல்வி டாக்டர் வசந்தமாலாவின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் சமாதான நீதவானும் ஆகிய ஜனாப் ஓ. எல். எம். இஸ்மாயில் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் முதற் பிரதியைப் பெறுகிறார்.

து. ரகுராமின் வரவேற்புரையின் பின் திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன், திருமலை நவம் ஆகியோர் எழுத்தாளரது படைப்புக் குறித்த தமது விமர்சனக் கருத்தை உரைப்பர்.

மேலும் விழாவில் அஸ்ரபா நூர்டீன், மாலைமதி சந்திரசேகரம் சி. தர்மினி ஆகியோரது கவிதைகளும் பாலகுமாரது ஆய்வுரை, திருமலை சுந்தாவின் கருத்துரை என்பனவும் இடம்பெறும். (இ-ப)

## சமய சந்நிதிகளில்

### வல்வை முத்துமாரி வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம் ஏப் 22

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம் மாதம் 25ம் திகதி பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, மே மாதம் 9ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவுற உள்ளது.

மே மாதம் 2ம் திகதி வேட்டைத் திருவிழா 7ம் திகதி சப்பரம் 8ம் திகதி தேர்த்திருவிழா ஆகியன நடைபெறும். (க-126)

### குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 22

இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் வதிரி பூவற்கரை விநாயகர் ஆலயத்தில் திரு. கா. சூரன் ஆசாரியாரின் குருபூசை நடைபெறும். (க)

# 5,000 பேருக்கு இடமுண்டு
# ஆனால் 1,200 பேரே அனுமதி

## யாழ். திறந்த பல்கலைக்கழக நிலை பற்றி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம் ஏப் 22

''திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய பிரிவில் மூன்று பீடங்களிலும் ஐயாயிரம் மாணவர்கள் கல்விபயில வாய்ப்பு இருந்தும் 1200 மாணவர்களே கல்வி பெறுகிறார்கள்.

இப்படி கூறுனார் யாழ். பிராந்திய பிரிவு நிர்வாகி திரு. எஸ். கருணாசரன்.

இந்தப்பிரிவில் இயற்கை விஞ்ஞானம், மானிடசமூக விஞ்ஞானம், எந்திரவியல் ஆகிய பீடங்கள் இயங்கி வந்தன.

இந்தப்பீடங்களுக்கு கீழ் பல்வேறுபட்ட துறைகள் உள்ளன. அவற்றின் முக்கியத்துவத்தை உணராது மாணவர்கள் சேருவதில்லை. இந்தத்துறைகளில் சேருவதன் மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல வேலை வாய்ப்புக்களைப் பெறலாம்.

குறிப்பாக புடவைத் தொழில், நூல் விற்றல் துறைகளில் மாணவர்கள் குறைவாகவே சேருகின்றார்கள்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்' (இ 31)

தலவாக்கலையில்

## பொலிஸ் - ராணுவ மோதல்

நுவரெலியா ஏப் 22

புதுவருட தினத்தன்று தலவாக்கலையில் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸ்காரர் ஒருவரும் ராணுவத்தினர் ஒருவரும் கடுமையாகக் காயமுற்றார்கள் என அறிய வருகின்றது.

பகல் நேரத்தில் நகரத்தின் மத்தியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின் போது ரசிகர்களாக இருந்த சீருடை அணியாத இராணுவ வீரருக்கும் கடமையில் இருந்த பொலிசாருக்கும் இடையே தான் இந்த மோதல் ஏற்பட்டது.

பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் கைகலப்பு ஏற்பட்டதும் சற்று நேரம் நகரில் பதற்ற நிலை நிலவியது.

அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திலிருந்து ஒரு பொலிஸ் பிரிவு அங்கு வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தியது. (க-58)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். ஏப்ரல் - 22

பழுதடைந்த நிலையில் உள்ள காரைநகர் மேற்கு பிரதான வீதியைத் துரிதமாகத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கு முகமாக பொதுமக்கள் நலன் விரும்பி, கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொதுநிறுவனங்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று மேமாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காரைநகர் வாரிய வளவு நல்லியக்கச் சபையில் மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ 7)

## நினைவில் இன்று

22- 04- 1990

- இரண்டாம் எலிஸபெத் மகாராணி பிறந்த தினம்.
- புவித் தினம்.

## பனைவள அபிவிருத்திஆய்வு

வல்வெட்டித்துறை, ஏப் 22

பனைவள அபிவிருத்தி வெளிக்கள ஆய்வு தொடர்பான ஒரு கூட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை கலைப்பீடாதிபதி நா. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான கலைத்துறை விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற உள்ள பனைவள ஆய்வு தொடர்பான நடைமுறைகளைவெளிக்கள ஆய்வு உறுப்பினர்களுக்கு விளக்கினார்கள்.

பல கட்டங்களாக இடம் பெறவுள்ள இந்த ஆய்வினை முதற்கட்டஆய்வுயாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 28 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

பனைவள அபிவிருத்தி ஆய்வினை பனை அபிவிருத்திச் சபையும், ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி அமையமும் கூட்டாக ஒழுங்கு செய்துள்ளன.

தற்பொழுது இடம்பெறும் முழுமையான வெளிக்கள ஆய்வின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண பனைவளம் தொடர்பான பூரண தரவினைப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-160)

# செய்திக் கொத்து

### புதிய செயலாளர்

சாவகச்சேரி ஏப் 22

கச்சாய் பிரதேச சபை செயலக வளவில் தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கென நிறுவப்பட்ட உதவி அரச அதிபர் செயலகத்தை சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு பூ. சுந்தரம் பிள்ளை திறந்து வைத்தார்.

திங்கள் வெள்ளி ஆகிய இரு தினங்களில் செயற்படும் இச் செயலகத்திலும் திரு. பூ. சுந்தரமபிள்ளையே உதவி அரச அதிபராகக் கடமையாற்றுவார். (இ-31)

### உதவி உடனே கிடைத்தது

நெடுந்தீவு, ஏப் 22

நெடுந்தீவு பலநோ. கூ. சங்கத்தில் அண்மையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. தகவலறிந்த விடுதலைப்புலிகள் உடனடியாக புங்குடுதீவு பலநோ. கூ. சங்கத்திலிருந்து உணவுப் பொருள்களைத் தருவித்து இப்பகுதி மக்களுக்கு வழங்கினர். (ப-111)

### பிரதேச சபை முன்மாதிரி

மானிப்பாய், ஏப் 22

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினர் இப்பகுதியைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக அரிசி மற்றும் உடுதுணிகளை அன்பளிப்பாக வழங்கினர்.

### சேவை பூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப் 22

சண்டிலிப்பாய் மாசியம் பதி சூரியோதயா சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் ரெட்பானா, எப். ஆர். எஸ். ஆகியவற்றின் உதவியுடன் கடந்த 2 ஆண்டுகளாக செயற்பட்டு வந்த போஷாக்கு நிலையம் தனது சேவையைப் பூர்த்தி செய்து கொண்டது. (ப-5)

### இவர்களும் செல்லலாம்

கொழும்பு, ஏப் 22

கல்வி அமைச்சின் சார்பில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள கல்லூரி அதிபர்களையும் தெரிவு செய்து அனுப்பும்படி அமைச்சர் லலித்அத்துலத் முதலி உத்தரவிட்டிருக்கிறார். (ப-எ)

### அன்னை பூபதி

சாவகச்சேரி, ஏப்ரல் 22

மட்டுவில் வடக்கு சிற்றூர் அவையின் ஆதரவில் மோகனதாஸ் சனசமூகமுன்றலில் அன்னை பூபதியின் நினைவு அஞ்சலிக்கூட்டமும் உண்ணாவிரதமும் இடம்பெற்றன. (இ-31)

### வட்டக்கச்சி சமய விழா

யாழ்ப்பாணம், ஏப் 22

வட்டக்கச்சி சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் ஆதரவில் இருநாள் சமயவிழா வெகு விமரிசையாக அண்மையில் கொண்டாடப்பட்டது. ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஏப் 22

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் முதலாம் தவணை விடுமுறையை அடுத்து இரண்டாம் தவணை எதிர்வரும் 23 ஆம் திகதி இங்கட்கிழமை ஆரம்பமாகும். (இ-113)

### பஜனைப் போட்டி

வட்டக்கச்சி கோயில்களில் பஜனைக் குழுக்களுக்கு இடையே பஜனைப்போட்டி ஒன்று அண்மையில் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. க. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆத்மஜோதி நா. முத்தையா கிளிநொச்சி இந்து இளைஞர் மன்ற தலைவர் திரு. கா. வீரசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-76)

### ஞாபகார்த்த நிலையம்

வட்டுக்கோட்டை, ஏப் 22

காலஞ்சென்ற திரு. நாகலிங்கம் திருமதி நாகலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் நினைவாக வட்டுக்கோட்டை சிவன் கோவில் அருகாமையில் அமைக்கப்பட்ட ஞாபகார்த்த நிலையத்தை திரு. வி. என் இராசரத்தினம் அண்மையில் திறந்து வைத்தார்.

வறிய மக்களது கல்வி கலை சமூக, பொருளாதார தேவைகளுக்கு கடன் வசதிகளை செய்து உதவும் நோக்கில் இந்நிலையம் இயங்கவிருக்கிறது.

இதன் தலைவராக திரு வி. என் இராசரத்தினமும் நிருவாக இயக்குனராகவும் ஆலோசகராகவும் யாழ் சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. கே. சிவசுப்பிரமணியமும் கடமையேற்றுள்ளனர். (ப-161)

### அலவன்ஸ்

நீண்ட நாட்களாக இழுபறி நிலையில் இருந்து வந்த கிராம சேவையாளர்களின் கஷ்ட நிவாரண அலவன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. (ப-126)

## மரணத்தை அதிகமாக நினைவு கூருங்கள்




''மோசடி செய்பவன், கஞ்சன், கொடுத்த தர்மத்தை பற்றி பிறரிடம் சொல்லிக் காண்பித்து பெருமை அடிப்பவன் ஆகியோர் சுவர்க்கம் பிரவேசிக்க மாட்டார்கள்.'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- மனிதன் மரணித்த பின் வானவர்கள் அவனிடம் 'உனது கணக்கில் என்ன சேமித்து வைத்தாய்? மறுமைக்காக எதை அனுப்பியுள்ளாய்?'' என்று கேட்கிறார்கள். (ஆனால்) மனிதர்களோ 'அவர் என்ன விட்டுச் சென்றார்?'' என்று கேட்கிறார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் பொன் மொழியாவது:-

''இன்ப சுகங்களை அழித்தொழிக்கும் மரணத்தை அதிகமாக நினைவு கூருங்கள்''

## வாசகர் திருமுகம்

### கல்முனை - யாழ் பஸ்சேவை வேண்டும்

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் பிரயாணிகள் அங்கிருந்து நேரடி பஸ்சேவை இன்மையால் பெரும் அவலங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கேந்திர பட்டினமாகத் திகழும் கல்முனைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே பஸ் சேவை இன்மையாலேயே மக்கள் அவலங்களுக்குள்ளாகின்றனர்.

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தினசரி சாதாரண பஸ் சேவை ஒன்றும், விசேட பஸ் சேவை ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து மேற்படி பஸ்களில் பிரயாணம் செய்வோர் புறப்படுவதற்கு முதல்நாளே மட்டக்களப்பு சென்று தங்கி அடுத்த நாள் காலையில் பஸ் பிடிக்க வேண்டிய பெரும்கஷ்ட நிலை நீடித்து வருகின்றது.

எனவே கல்முனைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே பஸ்சேவையை ஆரம்பிக்க சம்பந்தப்பட்டோர் உடன் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு நேரடி பஸ்சேவைகள் கல்முனை வரை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுமானால் அதுவரை தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இடையே நடைபெறும் இரு சேவைகளில் ஒன்றையாவது கல்முனை வரை நீடிக்க ஆவன செய்ய வேண்டும்.

ஏ. எல். எம். சலீம், நிந்தவூர்.

### திருத்தப்படாத வீதி

தொல்புரம் வழக்கம் பரை அம்மன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பித்து மூட்டுச் சந்தை வழியாக பானா வெட்டி வரை செல்லும் வீதி கால்நூற்றாண்டுக்கு மேலாக திருத்தம் செய்யாத நிலமையில் இருக்கின்றது. பாரிய கிடங்குகள் எங்கும் காணப்படுகின்றன. வாகனங்கள் செல்ல முடியாமல் இருக்கின்றது.

சிறு மழை பெய்தாலும் பல பாரிய குழிகள் வீதியில் காட்சிகொடுப்பதைக் கண்டு கொள்ளலாம். பொதுமக்கள் இவ் வீதியின் சீர்கேட்டை அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியும் பயன் ஒன்றும் கிடைக்கவில்லை.

க. வாமதேவன், சுழிபுரம்,

## ஓய்வூதிய நலன்புரி சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 8 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி இராசநாயகம் படிப்பகத்தில் நடைபெறும்.

திரு. வே. செல்லையாவின் தலைமையில் நடைபெறும், இக் கூட்டத்துக்கு ஆத்மஜோதி நா. முத்தையா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7)

## கண்டதும் கேட்டதும்

யாழ். நகரில் தற்போது பெற்றோலுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகிறது. தனிப்பட்டவர்கள் போத்தல் 30 ரூபா வரை பெற்றோலை விற்கிறார்கள். பெற்றோல் தட்டுப்பாடும் விலை உயர்வும் வாகன உரிமையாளர்களைப் பெரும் அளவு பாதித்து வருகிறது. அதே சமயம் நகரில் புதுவிதமான களவுக்கும் ஊக்கம் அளித்து வருகிறதுபோல் தெரிகிறது.

சில தினங்களுக்கு முன்னர் நகரின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோல் களவாடப்பட்டிருக்கிறது. அதுவும் சி டி 350 ரகத்தைச் சேர்ந்த ராட்சத மோட்டார் சைக்கிள் அது. அதன் உரிமையாளர் பெரும் சிரமத்தின் மத்தியில் பெற்றோலைத் தேடி அதனை உருட்டிச் செல்லவேண்டியதாயிற்று. எப்படி இருக்கிறது பெற்றோல் படுத்தும்பாடு.

செய்திலோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரஸ்பரம் உளவு பார்ப்பதில்லை; இரண்டு ஜேர்மனிகளும் இணக்கம்!

பொன், ஏப் 21

பரஸ்பரம் உளவு பார்ப்பதை நிறுத்திக்கொள்வது என்று மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் உடன்பாடு கண்டுள்ளன.

இரு நாடுகளும் கடந்த 40 ஆண்டுகளாக இராணுவ மற்றும் நடவடிக்கைகள் குறித்து உளவு பார்த்து வந்தன.

இப்போது இரண்டு ஜேர்மனிகளும் இணைந்து ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக இரு நாடுகளின் உள் துறை அமைச்சர்களும் கடந்த வாரம் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போதே இந்த உடன்பாடு காணப்பட்டது.

இரு நாடுகளின் எல்லைப் புறங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சகல கட்டுப்பாடுகளையும் எதிர்வரும் ஜுன் மாதத்துடன் அகற்றிவிடுவது என்றும் இப்பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டது.

எல்லைப் புறம் ஊடாக இரண்டு ஜேர்மனிகளைச் சேர்ந்த பிரசைகளும் போக்குவரத்துச் செய்வதில் தாராளப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டாலும் இருதரப்பு அதிகாரிகளும் பாஸ்போர்ட் மற்றும் தஸ்தாவேஜுகளை பரிசோதனை செய்தே வருகின்றனர். (ஏ)

## ★ லித்துஏனியா மீதான பொருளாதார முற்றுகையை கிரெம்ளின் ஆரம்பித்தது

வில்நியஸ் ஏப் 21

லித்துஏனியாவுக்கு இயற்கைவாயு விநியோகம் செய்வதை குறைத்து விடப் போவதாக கிரெம்ளின் அரசு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக மாஸ்கோவில் இருந்து அனுப்பப்பட்ட தந்தி ஒன்றை லித்துஏனியா நாடாளுமன்றத்தில் அதன் சபாநாயகர் நேற்று வாசித்தார்.

சுதந்திர பிரகடனத்தை ரத்துசெய்யாவிட்டால்பொருளாதார முற்றுகை விதிக்கப் போவதாகசோவியத்யூனியன் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் லித்துஏனியா பிரதமரை எச்சரித்திருந்ததுடன் காலக்கெடுவையும் விதித்திருந்தார்.

அதுபற்றி லித்துஏனிய நாடாளுமன்றம் விவாதித்துக் கொண்டிருந்த போதே இயற்கைவாயு விநியோகத்தை குறைக்கப்போவதாக கிரெம்ளின் அனுப்பிய தந்தி கிடைத்தது.

சுதந்திர பிரகடனத்தை ரத்துச் செய்தால் மட்டுமே லித்துஏனியாவுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி கோர்பச்சேவ் கூறியிருக்கிறார்.

கிரெம்ளின் அனுப்பிய தந்தி ஒரு பயமுறுத்தல் என்று மாஸ்கோ வட்டாரத்தில் வர்ணிக்கப்பட்டது. (ஏ)

## காபூல் அறிவிப்பு

காபூல், ஏப்ரல் 21

காஷ்மீரில் தலையிடுவதை உடனே நிறுத்தும்படி பாகிஸ்தானை, ஆப்கானிஸ்தான் அரசு நேற்றுக் கேட்டுக் கொண்டது.

காபூலில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில்,வடஇந்திய மாநிலங்களில் தீவிரவாத சக்திகளை பாகிஸ்தான் தூண்டி வருவதாக காபூல் அரசு குற்றஞ்சாட்டியது.

காஷ்மீரில் பாகிஸ்தான் தலையிடுவது ஆப்கானிஸ்தானுக்கு பயமுறித்தலாக அமைகிறது என்றும் அறிக்கையில் கூறப்பட்டது. (ஏ)

### உரிமை கோரல்

புதுடில்லி, ஏப் 21

புதுடில்லி நகரில் விஞ்ஞான பவன் கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்துக்கு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் உரிமை கோரியுள்ளனர். (ஏ)

### எகிப்து நிலை

செய்ரோ, ஏப் 21

மத்திய கிழக்கில் ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வரும்படி சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு எகிப்து வெளியுறவு அமைச்சர் எஸ்மட் அப்தல் மெகுயிட் வேண்டுகோள் விடுத்தார்.

மக்களை பெரும் எண்ணிக்கையில் அழித்து விடக்கூடிய ஆயுதங்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுள்ளார். (ஏ)

### கஸ்ரோ அறிவிப்பு

ஹவானா, ஏப் 21

அமெரிக்கா அணுக்குண்டைத்தான் போட்டாலும் கியூபா கம்யூனிஸக் கொள்கைகளைக் கைவிடாது.

ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ தன்னைச் சந்தித்த ஜப்பானிய பத்திரிகையாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார் என்று அரசு வானொலி அறிவித்தது.

மக்களின் உறுதியை தகர்க்கக்கூடிய ஆயுதங்கள் ஒருவரிடமும் இல்லை.

அமெரிக்க அணு ஆயுதங்களைப் பாவித்தாலும் கியூபா மக்கள் சரணடையப் போவது இல்லை''— என்று பிடல் கஸ்ரோ சொன்னார். (ஏ)

### துருப்புக்கள் வாபஸ்

வாஷிங்டன், ஏப்21

அடுத்த மூன்று ஆண்டுகளில் ஆசியாக் கண்டத்தில் இருந்து பதினையாயிரம் துருப்புக்களை விலக்கிக் கொள்ளப்போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் நேற்று அறிவித்தார். (ஏ)

### வத்திக்கான்-செக். உறவு

ரோம், ஏப் 21

செக்கோஸ்லேவேகியாவுடன் வத்திக்கான் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. (ஏ)


## அறிவித்தல்

இரசாயனவியல் - திரு. மகாதேவா அவர்களது வகுப்புகள் மீண்டும் ஞாயிறு 22 - 04 - 90 முதல் வழமை போல் நடைபெறும் என அறியத்தருகிறோம்.

★ Bond Institutes - யாழ்ப்பாணம்
★ Nagalingam Institute - திருநெல்வேலி
★ வாணி கல்வி நிறுவனம் - சுன்னாகம்

[சி-4312]

## கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

**A/L 90** கலை, வர்த்தகம்

**DAY CLASSES**

3 மாத கால முழுப்பாடத்திட்ட வகுப்பு

ஆரம்பம்: 25-04-90
புதன் 8.00 a.m,

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ வெளி மாவட்ட மாணவர்கள் நன்மை கருதி இவ் வகுப்பு ஆரம்பிக்கப்படுவதனால் வெளி மாவட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ முழுப்பாடத்திட்டமும் (Theory) ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
★ வினா-விடை வகுப்பு இலவசமாக நடைபெறும்.
★ ஒவ்வொரு பாடமும் வாராந்தம் 8 மணித்தியால வகுப்புகளாக நடைபெறும்.

[சி-4307]

## முக்கிய அறிவித்தல்

காலஞ்சென்ற சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான எங்கள் தந்தை பொன்னையா நவரத்தினம் அவர்களிடம் உறுதிகள், வழக்குகள் தொடர்பாக ஆவணங்களை கையளித்திருப்பவர்கள் அனைவரும் இம் மாத இறுதிக்குள் தினமும் மாலை 5 மணிக்குப் பின் வந்து உங்கள் ஆவணங்களை கையேற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இவ்விடயம் தொடர்பாக அனைவரும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.　[12357]

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ: சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 2000 வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 5/- கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று மீளத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- கட்டி எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்கள் 07 - 05 - 1990 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதில் பொது முகாமையாளர்.
(சி-4314)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்:
26 - 09 - 1956

மறைவு:
22 - 04 - 1984

### யுஸ்ரெலா யஸ்மின் கிறிஸ்ரியன்

பெண்மையினை நினைக்கையில் இவள் உருவம்
22 ஐ நினைக்கையில் இவள் துயரம்
உயிர்பு விழாவென்றால் இவள் இறப்புநாள்
என் செய்வோம்? செபிப்போம் ஆன்ம சாந்தி
மன அமைதி பெற
பலிகள் ஒப்புக் கொடுப்போம் வாரீர் யாவரும்

திருப்பலிகள் 25 - 04 - 90 மாலை 5 00 மணிக்கு அரியாலை புனித யூதாததேயு ஆலயத்திலும், 28 - 4 - 90 காலை 6.30 மணிக்கு பரிசுத்த மரியன்னை பேராலயத்திலும் நடைபெறும்.

கணவன், மகள், பெற்றோர்,
சோதர சோதரிகள், மக்கள் மருமக்கள்,
மாமி, மைத்துன, மைத்துனிகள்.

நம். 1, சென். யூட் அவனியூ,
அரியாலை,
392. பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.　(12349)

## ஓராண்டு நினைவஞ்சலி திவச அழைப்பிதழ்



திரு.
**பொன்னுத்துரை இராமநாதன்**
(Fisheries Inspector of Jaffna)

அன்னை மடியில்: 11 - 03 - 1930　ஆண்டவனடியில்: 27 - 04 - 1989

திதி: 22 — 04 — 1990

சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலியும், திவச கிரியைகளும் 22 - 04 - 90 அன்று பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் இதில் கலந்து அஞ்சலி செலுத்தி விருந்தோம்பலிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

120, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப் பாணம்.　[12358]

குமுலுஸ் D.F. போட்டி


## BASF குமுலுஸ் D.F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி. கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ____
முகவரி ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

Licence No S/731

FINCHEM AGRO DIVISION
பின்லெ கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி. கொழும்பு 2.

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுங்கேணியில் நடந்த அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சி

நெடுங்கேணி, ஏப் 22

நெடுங்கேணிப் பிரதேசத்தில் அன்னை பூபதியின் உண்ணாவிரத நிகழ்ச்சி சுழற்சி முறையாக நடைபெற்று இறுதி நிகழ்ச்சியாக 18 ஆம் திகதி புதன்கிழமை இரவு தெற்கு வடக்கு சிற்றார் சபை உறுப்பினர்களும், வர்த்தகர்களும் உண்ணாவிரதம் இருந்து 19 ஆம் திகதி வியாழன் காலை அன்னதான வைபவத்துடன் நிறைவு பெற்றது.

இரவு நிகழ்ச்சியில் நெடுங்கேணிப் பகுதி கலைஞர்களின் இசைநிகழ்ச்சிஇடம்பெற்றது. கடந்த வியாழக்கிழமைகாலை அஞ்சலி நிகழ்ச்சிக்கு சிற்றார் அவை தலைவர்கள் திரு. வி. குசராசா, திரு. பொ. மங்கள ஜெகநாதன் வர்த்தக சங்கத் தலைவர் திரு. அ. க. செல்வரத்தினம் ஆகியோர் தலைமை வகித்தனர்.

நெடுங்கேணி பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரிவு அரசியல் பொறுப்பாளர் திரு. பாலன் குத்துவிளக்கேற்றி ஆரம்ப உரை நிகழ்த்தி அன்னை பூபதி உண்ணாவிரதத்திற்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கும் உள்ள தொடர்பு பற்றி எடுத்துக் கூறினார்.

திரு. க. பே. கந்தசாமியின் நன்றி உரையுடன் உண்ணாவிரத நிகழ்ச்சி முடிவுற்றது. (க-108)

## புதிதாக மாணவரைச் சேர்க்க பாடசாலைகளில் அனுமதிக் குழு

கொழும்பு, ஏப். 22

பாடசாலைகளில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பது பற்றி தீர்மானிக்க பாடசாலை அனுமதிக் குழுக்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் எவ்வொரு குழு அமைக்கப்படும்.

பாடசாலை அதிபர், பெற்றோர் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம் பெறுவர்.

அனுமதிக்கப்படும் மாணவர் யார் என்பது விண்ணப்பித்த மாணவரின் பெற்றோர் முன்னிலையில் வெளியிடப்படும்.

அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்படும்.

அனுமதி மறுக்கப்பட்ட மாணவரின் பெற்றோர் அந்தந்தப் பாடசாலையில் அமைக்கப்படும் மேன்முறையீட்டுக் குழுவுக்கு முறையிடலாம்.

மேன் முறையீட்டுக் குழுவின் தீர்ப்பில் திருப்தி அடையாத பெற்றோர்கள் நீதிமன்றம் சென்று நியாயம் கோரலாம்.

இத்தகவல்களை அமைச்சர் அத்துலத்முதலி உயர்கல்வி அமைச்சில் பொதுசன உறவு அலுவலகம் ஒன்றைத் திறந்த வைத்துப் பேசுகையில் வெளியிட்டார். (உ-எ)

## வெளிநாட்டு தபால் மோசடி; உதவி தபாலதிபர் கைது!

கொழும்பு, ஏப். 22

பல்வேறு நபர்களுக்கு அனுப்பப்பட்ட 25 வெளிநாட்டுத் தபால்களை சட்ட விரோதமாக வைத்திருந்தார் என்ற முறைப்பாட்டின் பேரில் கொழும்பு பிரதம கந்தோரின் தபால் அறையில் பணிபுரிந்து வந்த உதவித் தபால் அதிபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரான எஸ். ஆர். சிறிபால, மாளிகாகந்தை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேகநபர் காசுப்பிணையில் விடுவிக்கப்பட்டார். (உ-எ)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 22

நேற்றுக் காலை யாழ். வெலிங்டன் சந்திக்குச் சமீபமாக லொறியும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்தவர் படுகாயம் அடைந்தார்.

பிரவுண் வீதியைச் சேர்ந்த தியாகலிங்கம் என்பவரே காயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்! (ஒ)

### அங்கீகாரம் பெறாமல்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்ஸிகள் இயங்க முடியா!

கொழும்பு, ஏப்ரல் 22

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஆங்கீகாரம் இன்றி மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்ப தனியார் தொழில் ஏஜண்டுகளுக்கு அரசு தடை விதித்துள்ளது

இத்தடை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருகிறது.

தொழில் அமைச்சு இது தொடர்பாக எடுத்து உள்ள தீர்மானத்தின்படி, மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாளர்ளை அனுப்பும் தனியார் ஏஜன்ஸிகள், மே மாதம் முதலாம் திகதியின் பின்னர் அப்படி அனுப்புவதற்கான அங்கீகார அத்தாட்சிப் பத்திரத்தை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடமிருந்து பெறவேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள தொழில் வாய்ப்புக்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தவுடன் அவற்றை தனியார் தொழில் ஏஜன்ஸிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு முதலில் அறிவிக்க வேண்டும்.

பணியகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் பட்டியலில் இருந்தே தனியார் தொழில் ஏஜன்ஸிகள் தாங்கள் மூலம் அனுப்பப்படும் பணியாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

தனியார் தொழில் ஏஜன்ஸிகள் சொந்த முறையில் தெரிவு செய்யும் பணியாளருக்கு பாஸ்போர்ட், விஸாக்கள் வழங்கப்படமாட்டா.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படும் பணியாளர்களுக்குரிய விமானடிக்கட்டுக்களை தனியார் தொழில் ஏஜன்ஸிகள் கட்டாயமாக வழங்கியே ஆக வேண்டும்.

இத்தகவல்களை தொழில் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். [உ-எ]

## கைவிடப்பட்ட முகாமில ஆயுதங்கள்

கொழும்பு, ஏப் 2

வடமத்திய மாகாணத்தில் உள்ள அடர்ந்த காட்டின் மத்தியில் கைவிடப்பட்ட நிலையில்காணப்பட்டமுகாம் ஒன்றில் இருந்து ஜேர்மன் தயாரிப்பு ஜி 3 ரக ரைபிள் ஒன்று, ரஷ்ய தயாரிப்பான ஏ கே 47 ரகரைபிள் ஒன்று, இயந்திரத் துப்பாக்கி ஒன்று- ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர் [உ.எ]

## புனரமைப்பு

கொழும்புத்துறை ஏப்.22

யாழ். பழைய செயலகம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ப-30)

## விசேட உற்சவம்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ அஷ்டபுஜ துர்க்காதேவி அம்பாளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பி. ப. 4 00 மணிக்கு விசேஷ உற்சவம் நடைபெற்று வருகின்றது. (இ-7)

## பதவியேற்பு!

கோலாலம்பூர், ஏப்ரல் 22

மலேசியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. செ. இராஜதுரை அண்மையில் கோலாலம்பூரில் மலேசியமன்னர்யாங்டிபெர்ட்டுஅன்னைச் சந்தித்து தனது பதவிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தார். [உ-எ]

## இன்றைய நூல் வெளியீடு

சொக்குவில் ஏப் 22

கவிஞர் சத்தியசீலனின் ''அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானை'' இலக்கிய நூல் வெளியீட்டு விழா அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

அல்லைப்பிட்டி இலக்கிய வட்டத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா தலைமையில் நடைபெறும். (இ 69)

## கைதடி நவீல்ட் பாடசாலை பட்டமளிப்பு வைபவம் 28 இல்

யாழ்ப்பாணம் ஏப் 22

கைதடி நவில்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் பட்டமளிப்பு வைபவம் 28 ஆம் திகதி சனிக்கிழமை10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்

விழிப்புலன் இழந்தோருக்கு போதனை அளிப்பது, புனர்வாழ்வு அளிப்பது ஆகியவற்றில் ஒரு மாதகால பயிற்சி பெற்ற சுமார் 30 பேருக்குப் பத்திரங்கள் வழங்கப்படும்.

உடைதயாரிப்பில் ஒரு ஆண்டுகாலம் பயிற்சி பெற்ற 3 செவிப்புலன் அற்ற இளம் பெண்களுக்கு பத்திரங்களும் சிங்கர் சிக்-சாக் இயந்திரங்களும் வழங்கப்படும்.

மேலும் அடுத்த கட்டமாக பயிற்சிபெற உள்ள 10 செவிப்புலன் அற்ற இளம் பெண் பயிற்சியாளர்களும் அறிமுகம் செய்யப்படுவார்கள்.

இதைத்தொடர்ந்து பயிற்சி ஆசிரியர்கள் யங்கு பற்றும் கலை நிகழ்ச்சி ஒன்று இடம் பெறும். (க)

## பயிற்சி டாக்டர்கள் 510 பேர் நியமனம்

கொழும்பு, ஏப் 22

510 பயிற்சி டாக்டர்கள் சென்ற 16ஆம் திகதியில் இருந்து நாட்டில் உள்ள பல ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

சுகாதாரத் திணைக்களம் இந்த நியமனங்களை வழங்கியிருக்கின்றது. [ஒ-எ]

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் ஏப் 22

சுண்ணாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் மே மாதம் 15 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பிக்கும்.

தேர்த்திருவிழா மே 23 ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா 24 ஆம் திகதியும் நடைபெறும். [ச]

### சமாதான - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள பேச்சு வார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்று வெற்றி அடைய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே இந்த சமாதான யாத்திரை ஒழுங்கு செய்யப்படுகிறது என்று திரு. திசநாயக கூறினார்.

உண்மையான சமாதான முயற்சிகள் யாவற்றுக்கும் எப்பொழுதும் நாம் ஆதரவு வழங்குவோம் என்று திரு. தினேஷ் கூறினார். (க-164)

### திடீர் பொதுத்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டமிருந்து புதிய ஆணையைப் பெறுவேன்.

திடீர்த் தேர்தல் ஒன்றுக்கு தயாராக இருக்கும்படி தேர்தல் ஆணையாளருக்கும் அரச அச்சகத் தலைவரு (Govt. Printer) க்கும் தெளிவான உத்தரவு கொடுத்துள்ளேன்.

திடீர்ப் பொதுத் தேர்தலுக்குத் தேவையான பணமும் ஒதுக்கப்பட்டாயிற்று.

திடீர் பொதுத் தேர்தலை நடத்தி நாட்டை அதிர்ச்சியில் பிரேமதாஸா ஆழ்த்துவார் என்று சிலர் கூறுகிறார்கள். அப்படி அவர்கள் கூறிவருவதற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

- இப்படி ஜனாதிபதி சொன்னார்.

திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி மூன்று விஷயங்களில் ஜனாதிபதி பிரேமதாஸா மக்களிடமிருந்து புதிய ஆணையைப் பெறவிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

அந்த மூன்று விஷயங்களும் வருமாறு:

★ நாடாளுமன்றத்தில் 3 இல் 2 பங்குபெரும்பான்மை பெறுவது.

★ நாடாளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் பிரதிநித்துவம் பெற உதவுவது.

★ நாடாளுமன்றத்தில் கூடுதல் இளைஞர்கள் பிரதிநிதித்துவம் பெற வாய்ப்பளிப்பது.

இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-எ)


### இரண்டாவது நினைவஞ்சலி



திருமதி

**கனகநாயகி செல்வரட்ணம்**

தோற்றம்: 15 - 07 - 1928 மறைவு: 23 - 04 - 1988

அன்பும் டண்பும் அறமெனப் பூண்டு பன்நெடுங் காலம் இல்லற விளக்கை மென்மையாய் ஏந்தி அணையாது காத்த புன்னகை அரசி கனகநாயகியே! நின் நினைவெனும் சோலை இறுகப்பற்றித் தனிவழி நடக்கும் நின் அன்புக் கணவன் இன் சுடரின் சுடர்கள் செல்வி, சிவா பிள்ளைகள் என்றும் மறந்திலம் உன்னை இன்று நினைப்பதற்கு.

டாக்டர் ஆ. செல்வரட்ணம் - கணவன்
கௌசலா சிவகுமாரன் - மகள்
சிவகுமாரன் - மருமகன்
தாரணி, யோகீசன் - பேரப்பிள்ளைகள்

[3335]

### அந்தியேட்டி அழைப்பிதழ்

(90ஆம் நாள்)



**சின்னத்துரை விமலேந்திரன்**

(சரஸ்வதி மில் உரிமையாளர்)

தோற்றம்: 07 - 01 - 1951 அழிப்பு: 24 - 01 - 1990

திதி: 23 — 04 — 90

23-04-90 (திங்கள்) அன்னாரின் வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்;

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி,
முடமாவடி.

[3338]


### தமிழக - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் திட்டவட்டமாகப் பிரிக்கப்படவில்லை. சில இடங்களில் கடல் எல்லைப் பிரதேசத்தை பிரிப்பதற்கு இருபக்கமும் 12 மைல் கடற்பிரதேசம் இல்லை.

தெரிந்தோ தெரியாமலோ எல்லை மீறிச் செல்லும் மீனவர்களைக் கைது செய்வதும் இரண்டு நாட்கள் வைத்திருப்பதும் திருப்திதரவில்லை.

இலங்கையைச் சேர்ந்த எந்தப் போராளிக் குழுக்களும் ஆயுதங்களுடன் தமிழ் நாட்டில் நடமாட அரசு இடமளிக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரால் தமிழ் நாட்டில் பிரசாரம்செய்வதும் தடைசெய்யப்படும். தொடர்ந்து இச்செயல்களில் ஈடுபடுபவர்களை சட்டம் விட்டு வைக்காது.

— மேலும் இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். (ஒ-உ-எ)

### தமிழ்---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டி அடித்தார்.

எந்த அந்நியப்படையும் எங்கள் நாட்டுக்குள் நாங்கள் வர அனுமதியோம்.

மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கம்தான் நிற்கிறார்கள் என்பதை உணர்ந்த சில தீய சக்திகள் எங்களுக்குள் பிளவு, பேதமை, வேற்றுமை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. இவர்களையிட்டு நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். முக்கியமாக முஸ்லீம் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

இப்படி அவர் கூறினார்.

மகளிர் பிரிவின் தலைவி செல்வி சுந்தரி உரையாற்றிய போது ஆண்களோடு சரிசமமாக போராட்டத்தில் ஈடுபட பெண்கள் முன்வர வேண்டும். முழுமையான விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பெரியது. பெண்களின் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராட பெண்கள் [illegible] வர வேண்டும் என்றார். (க-15)

### கலாசார, கற்கை நெறி பீடத்துக்குப் பதிலாக

## கலை, கலாசார பீடம் கிழக்கு பல்கலைக்கழகத்தில்!

கொழும்பு, ஏப். 22

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் இயங்கிவந்த கலாசார கற்கைநெறி பீடத்தை கலை, கலாசார பீடமாக மாற்றியமைக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதியளித்திருக்கிறது.

புதிய பீடத்தின்கீழ் சமூக விஞ்ஞானத்துறை, மொழித் துறை ஆகிய இரண்டு துறைகள் இயங்கும்.

மூன்றுமாத காலத்தினுள் இயங்க ஆரம்பிக்கவிருக்கும் புதிய பீடத்துக்கு 14 விரிவுரையாளர்களை நியமிக்கவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதியளித்திருக்கிறது.

விரிவுரையாளர்களை நியமிப்பதற்காக தகுதியுடையவர்களிடமிருந்து விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன. [உ-2]

### சார்க் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை—

ஓர் ஆண்டில் இரண்டு உச்சி மாநாடுகள் நடத்தலாம் என்ற நிலைப்பாட்டையும் [illegible] பாலான நாடுகள் நிராகரித்துவிட்டன. (உ-எ)

## உள்ளாடைக்குள் அமெரிக்க டொலர்கள்!

கொழும்பு, ஏப் 22

தனது உள்ளாடைக்குள் ஆயிரத்து200 அமெரிக்க டொலர் பணத்தைமறைத்து வைத்துக் கொண்டு சிங்கப்பூர் செல்ல முயற்சித்த இளைஞர் ஒருவரை கட்டுநாயக்கா சுங்கத்திணைக்கள அதிகாரிகள் பிடித்தனர்.

விசாரணையின் பின்னர் அந்த இளைஞருக்குப் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [ஒ-எ]


### எமது நேற்றைய புதிய வெளியீடு

[1] சுரேஸ் - நதியா - S. S. சந்திரன் - செந்தில்
★ என் வீடு என் கணவர் (ஒறிஜினல்)
[2] நாகார்ஜுன் - அமலா
★ பாசத்தை திருடாதே

**வீடியோ விமல்**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

### விக்னா ரியூசன் சென்ரர்

52, Stanley Road, Jaffna.

கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

கலை, வர்த்தக

**A/L**

**91 DAY CLASSES**

தினசரி 8.00 — 2.00

ஆரம்பம்: 03 - 05 - 1990 காலை 8.00

முக்கிய குறிப்பு:
i முழு பாடத்திட்டமும் செய்து கொடுக்கப்படும்.
ii எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
iii 30 ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
vi பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
v விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
vi முற்றிலும் பாடசாலை போன்று நடாத்தப்படும்.

கலை வர்த்தக வகுப்புகளுக்கான **92 A/L** அனுமதிகளை முன்கூட்டியே அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். வகுப்புக்கள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது.

(சி-4465)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

22 - 04 - 1990 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பொன்னம்மா

கருவிலைப்பிறப்பிடமாகக்கொண்டவரும், மானிப்பாய் வாசியும், முன்னாள் பெல்மதுளை பிரபல வர்த்தகர் N. V. K. ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வேலாயுதம்-கந்தையாவின் அன்புமனைவிதிருமதிபொன்னம்மா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர், தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அனலைதீவு வேலாயுதம், சிவகாமியின் அன்பு மருமகளும், கங்காலெட்சுமி, இந்திரபுஸ்பம், கலாநாதன் (West Germany), நந்தகுமாரன் (West Germany), சந்திரலெட்சுமி, சுதந்திரலெட்சுமி, நிரந்தரலெட்சுமி, சுதந்திரகுமாரன் [U.K], ஆகியோரின் அருமைத்தாயாரும், கனகசபாபதி(U.K), பரம்சோதி, கிருஷ்ணராஜா, பவானந்தன், விமலாதேவி (West Germany), கேதீஸ்வரி (W.G), ஆகியோரின் அன்பு மாமியாரும், அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரகத்தி, காலஞ்சென்ற பொன்னம்மா, சிவகுரு, சபாபதி, கனகசபை, ஆகியோரின் மைத்துனியும், தெய்வானை, சீதையம்மா, மங்களம், காலஞ்சென்ற மாணிக்கம், வீரசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈசன்(U.K), விஜி(U,K), விக்னா, சாந்தி, அழகன் [Swiss], பிரபாறாஜி, மயூரன், தீபன்(West Germany) றதீஸ்(W.G), சாலனி(W.G), தர்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிறு காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
வே. கந்தையா.

சந்தையடி ஒழுங்கை,
மானிப்பாய். (3331)

### திருமதி ஜெயமலர் செல்வராசா

திருமதி ஜெயமலர் செல்வராசா காலமாகிவிட்டார். அன்னார் செல்வராசா (நில அளவையாளர், மகியங்கனை) அவர்களின் அன்பு மனைவியாரும், தம்பிஐயா (இளைப்பாறிய விரிவுரையாளர்), பொன்னம்மா ஆகியோரின் மகளும், சிவமலர், பாலேந்திரன், மகேந்திரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (அவுஸ்திரேலியா), தயாளன்(இலங்கை வங்கி, சுன்னாகம்), சாந்தினி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், பவேந்திரா (இலங்கை சீமேந்து கூட்டுத்தாபனம்), நமசிவாயம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22 - 4 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆனைக்கோட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாளன்.

"கோகுலம்"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (3336)

### திரு S. S. மரியான் தியாகராசா

ஊர்காவற்றுறை 36/1, சுருவில் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் S.S. மரியான் தியாகராசா 20 - 04 - 90 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் செல்வமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோண்சன் மற்றும் றொபட்சன், கெக்டர் (சுவிஸ்), மாலினி, மொறீன் (ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), றெஜி (தபால் அலுவலகம், ஊர்காவற்றுறை), கயசிந் (ஆசிரியை, ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), மேளின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசிலன், முத்துக்குமார், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், பவானி, யோண்சன், கிறிஸ்ரபெல், கொட்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், யோகராசாவின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 22 - 04 - 90 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் சேமககாலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்;
குடும்பத்தார்.
(12362)

### திருமதி அன்னப்பிள்ளை செல்லையா

தையிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை செல்லையா 21 - 04 - 90 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்ற யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் R. செல்லையாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற ஆசிரியர் ஆ. கந்தையாவின் அன்புச் சகோதரியும், செலவராணி (அமெரிக்கா), காலம் சென்ற கமலாம்பிகை, லீலாவதி, காலம் சென்ற ஆனந்தராசா, மாமலர் (லண்டன்), துரைரத்தினம் பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனம்), திருநாவுக்கரசு, காலம்சென்ற பத்மினி, கருணாநிதி (சவோய் ஹோட்டல்) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr. துரைரத்தினம் (அமெரிக்கா), க. தர்மராசா (லண்டன்), யோகமணி, கிருஷ்ணகுமாரி, காந்தரூபன் ஆகியோரின் மாமியாரும், அருந்ததி, புனிதம், கௌரிசங்கர், பிரியா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தையிட்டி இல்லத்தில் இன்று 22 - 4 - 90 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தையிட்டி பொது மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர் நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செ. திருநாவுக்கரசு.

கலைமகள் வீதி,
தையிட்டி, காங்கேசன்துறை, (12944)

## தலைமன்னார் கப்பல் சேவை; ஆரம்பிக்க தாமதம் ஏன்?

யாழ்ப்பாணம், ஏப் 22

இராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு காரணம் என்ன?

இதுபற்றி அறியவருவதாவது:-

கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காக தலைமன்னார் துறைமுக திருத்தவேலைகள் நடைபெற்று வந்தன. இந்த வேலைகளை ரயில்வேப் பகுதி ஊழியர்கள் செய்து வந்தனர்.

இந்த ஊழியர்களுக்கான ஆபத்து நிவாரணப்படி (Risk Allowance) வழங்கப்படவில்லை.

அதை அடுத்து திருத்த வேலைகள் பெருமளவு ஸ்தம்பித்தன.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் தலைமன்னாரில் நடைபெற்ற விசேட மாநாடு ஒன்றில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஒ 9)

## கோட்டையில் நேற்றும் பொலீஸ் நேர்முக பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். கோட்டையில் நேற்றும் இரண்டாவது நாளாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு றிசேர்வ் பொலீஸுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

50 பேர் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் சிலர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை புதிய விண்ணப்பங்களும் நேற்று பரிசீலிக்கப்பட்டன. அதில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடையவர்களது விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. (ஒ-9)

### வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்

## விவசாய பீடத்துக்கு உதவும்

கொழும்பு, ஏப். 22

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் விவசாயபீட அபிவிருத்திக்கு பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் உதவ முன்வந்திருக்கின்றன.

இங்கிலாந்தில் உள்ள எடின்பரோ பல்கலைக்கழகம், நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகத்தின் ''வை கொலேஜ்' பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம், றெடிங் பல்கலைக்கழகம் ஆகியனவே உதவவிருக்கின்றன.

பாடத்திட்ட அபிவிருத்தி, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், விரிவுரையாளர் பயிற்சி நூல்கள் ஆகியன சம்பந்தப்பட்ட விடயங்களிலேயே உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

அண்மையில் லண்டனுக்குச் சென்றிருந்த கிழக்கிலங்கை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்தானம் இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்வது குறித்து அங்குள்ள பல்கலைக்கழக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். [உ-2]

## கொழும்பு--ஆஸ்திரேலியா நேரடி விமானச் சேவை!

கொழும்பு, ஏப்ரல் 22

கொழும்புக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்துச் சேவையை எயர்லங்கா எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்யவுள்ளது.

அன்று ஆஸ்திரேலியா செல்லும் முதலாவது விமானத்தில், ஜீ. சீ. ஈ. சாதாரணப் பத்திரப் பரீட்சையில் மிகச் சிறப்பாகசித்திபெற்ற 8மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.

மாகாணத்துக்கு ஒருவர் வீதம் இந்த எட்டு மாணவர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

இந்த விமானத்தில் அழைத்துச் செல்லப்படவிருந்த சில அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அரசு அதிகாரிகளின் பெயர்கள் ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவை அடுத்து அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டன.

அந்த இடங்களுக்கே எட்டு மாணவர்களும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (உ-எ)

## பிராந்தியக் கல்லூரிகள் குறித்து வெள்ளை அறிக்கை!

கொழும்பு, ஏப்ரல் 22

பிராந்தியக் கல்லூரிகளை நிறுவுவது பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு விரைவில் வெளியிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதி பெறத் தவறிய உயர் வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழகங்களுடன் இணைந்துசெயல்படும் பிராந்தியக் கல்லூரிகளில் சேர்ந்து உயர் கல்வியைத் தொடர இந்தப் புதிய திட்டம் உதவும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## துப்பாக்கிகளை ஒப்படைக்க மீண்டும் கட்சிகளுக்குக் கடிதம்!

கொழும்பு, ஏப் 22

பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பது பற்றி சகல அரசியல் கட்சிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளது.

பெரும்பாலான ஆயுதங்களை அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திருப்பி ஒப்படைக்கத் தவறிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்தே மீண்டும் கடிதம் எழுதுவது என்று பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசியல் கட்சிகள் திருப்பி ஒப்படைத்துள்ள துப்பாக்கிகள் பற்றிய விவரம் கட்சி வாரியாக கீழே தரப்படுகிறது.

ஐ. தே. க -607 சுதந்திரக் கட்சி - 438 ஸ்ரீலங்கா மக்கள் கட்சி – 153 ஐக்கிய சோஷலிச அணி - 09 மக்கள் ஐக்கிய முன்னணி – 50 தனிப்பட்டகு ழுக்கள் – 331. (ஔ-)

## தெற்கில் வன்செயலால் ரூ. 93½ கோடி நஷ்டம்!

கொழும்பு ஏப் 22

வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்செயல்களால் ஏற்பட்ட சேதம் 93½ கோடி 56 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத்தகவலை செய்தியாளரிடம் தெரிவித்தார். [உ-ஏ]

## தியாகிகள் திலீபன்-பூபதி காட்டிய பாதையில் ஓரணி திரள்வோம்

### வவுனியா எழுச்சிக் கூட்டத்தில் சந்திரன்

வவுனியா, ஏப். 22

'தமிழ் மக்களின் சுயநிர்ணய அடிப்படையிலான விடுதலையை வென்றெடுப்பதற்காக, தியாகி திலீபன், அன்னை பூபதி ஆகியோர் காட்டிய எழுச்சிமிக்க வழியைப் பின்பற்றி, ஒன்றிணைந்து ஓரணியில் திரண்டு செயற்படுவோம்.'

வியாழனன்று வவுனியா நகரசபை மைதானத்தில் அன்னை சீதாதேவி பொன்னையா தலைமையில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் சந்திரன் மேற்கண்டவாறு அறைகூவல் விடுத்தார்.

அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டை நினைவு கூரவும், மண்ணுக்காக உயிர் நீத்த புலிகள் தியாகிகளுக்காகவும் வவுனியா மாவட்ட சிற்றூர் அவைகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எழுச்சிப் பேரணியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் புலிக்கொடியை ஏற்றிவைக்க உயிர் நீத்த வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த புலிகளின் அன்னையர் மங்கள விளக்கேற்ற கூட்டம் ஆரம்பமாகியது.

திரு. சந்திரன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்த அன்னை பூபதி இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் பெண்ணுலகுக்கு ஒரு வழிகாட்டியாகவும் விடுதலை வீரர்களுக்கு ஒரு விடிவெள்ளியாகவும் திகழ்ந்தார்.

இந்த மண்ணுக்காக உயிர் நீத்த ஆயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்டபுலிகளினதும், அன்னை பூபதியினதும் வழியைப் பின்பற்றி சமதர்ம தமிழீழம் நோக்கி தொடர்ந்தும் போராட எம்முடன் இணைய வேண்டும்.

—இப்படி அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தினேஷ் பேசுகையில்—

அன்னியனுக்குத் தலை வணங்கக்கூடாது; ஆக்கிரமிப்பை முறியடிக்கவேண்டும் என்று போராடி உயிர்நீத்த சங்கிலியனின் வழிவந்த நாம் ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகப் போராடி அன்னிய சக்தியை எமது மண்ணிலிருந்து விரட்டினோம். இதற்கு அன்னை பூபதியும் ஓர் ஊக்கு சக்தியாகத் திகழ்ந்தார்.

உண்ணா நோன்பிருந்து தமிழ் மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் உயிர் நீத்த அன்னை பூபதியின் தியாகத் தன்மையை உரிய முறையில் அப்போது வெளிப்படுத்தமுடியவில்லை.

நாம் ஆயுதங்களைப் பூஜிப்பவர்களல்ல. நிர்ப்பந்தம் காரணமாகவே ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். எமது மண்ணினதும் மக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை எமது ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை. எந்த ஒரு அன்னிய சக்தியும் எம்மை அடிமைப்படுத்தவோ ஆக்கிரமிக்கவோ முடியாது.

எமது நிரந்தரமான விடுதலை உறுதி செய்யப்படுவதற்கான போராட்டத்திற்கு மக்கள் அனைவரினதும் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு தேவை–

இப்படி அவர் கூறினார்.

ஆசிரியரும் முஸ்லிம் பிரமுகருமான ஜனாப் அப்துல் சமது பேசுகையில்-

கும்பம் வைத்து வரவேற்கப்பட்ட இந்திய அமைதிப் படையினர் தமது ஆக்கிரமிப்புத்தனமான போக்கு காரணமாக விடுதலைப் புலிகளின் அஹிம்சை, ஆயுதப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சொல்லாமல் கொள்ளாமல் போக நேர்ந்தது.

தியாகி திலீபன், அன்னை பூபதி மட்டுமல்லாமல் ஆயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட வீரவேங்கைகளின் வழியில், தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களும் தம்மைப் பலி கொடுத்துள்ளார்கள்.

வஞ்சகர்களின் சூழ்ச்சி காரணமாக தமிழ் முஸ்லிம் மக்களிடையே கிழக்கில் நிகழ்ந்த துயரச் சம்பவங்களை போல வடக்கிலும் குறிப்பாக வவுனியாவிலும் எம்மிடையே பிளவு ஏற்படுத்த முடியாது. ஏற்படுத்தவும் விடமாட்டோம்.

தமிழ் பேசும் மக்களின் நிரந்தர விடுதலைக்காக பொருளாதார அரசியல் போராட்டத்தில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் இணைந்திருப்போம்.

இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி அமைப்பாளர் செல்வி ரதி, வவுனியா தமிழ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திருமதி எமில்டா அற்புதராஜா, வவுனியா நகர சிற்றூர் அவைத் தலைவர் டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் உட்பட வேறுபல முக்கியஸ்தர்களும் இங்கு உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இவ் எழுச்சி விழாவையொட்டி மகரதோரணங்கள், வாழைகள் கட்டப்பட்டு நகர வீதிகள் விழாக்கோலம் பூண்டிருந்தன. (இ-164)

## நேற்று மாலை இறுதிக்கிரியைகள்!

கொழும்பு, ஏப்ரல் 22

காலஞ்சென்ற ஜனாதிபதி சட்டத்தரணி திரு. எச். டபிள்யூ ஜெயவர்த்தனாவின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

பெரும் திரளான பொது மக்கள் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றினர்.

எச். டபிள்யூ ஜெயவர்த்தனாவின் மறைவையொட்டி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இரங்கற் செய்தி ஒன்றை விடுத்திருந்தார். (உ)


பார்வையற்றோர் பார்வைகுறைந்தோர்

கல்வி வசதி

- மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது.
- விடுதி வசதி, கல்வி, உணவு யாவும் இலவசம்.
- சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு விசேட உதவியாளர் உண்டு.
- பல்கலைக்கழகப் படிப்பு வரை கல்வி வசதி செய்து கொடுக்கப்படும்.
- ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி கொடுக்கும் திட்டம் உண்டு.

நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்
நவீல்ட் பாடசாலை,
விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்,
கைதடி.
[சி-4303]


## மரண அறிவித்தல்

### இணுவில் கிழக்கு [இராசா] கந்தையா அம்பலவாணர்

(நொத்தாரிசு லிகிதர்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கந்தையா அம்பலவாணர் 21-04-1990 சனிக்கிழமை காலமானார். இவர் சின்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், திருமதி இரகுபதி அம்பிகாதேவி (இலங்கை மின்சாரசபை சுன்னாகம்), திரு. அ. அருள்நாதன் மத்திய மின்சாரசபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மாணிக்கம் இரகுபதி [மகாவலி அபிவிருத்திச்சபை, வெலிக்கந்த], திருமதி அ. புஷ்பகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும்' காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற ஆசிரியை திருமதி முருகேசு பராசக்தி, திருமதி கனகசபை கைலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திரு. பொன்னையா நடராசாவின் மைத்துனரும், இராகவன், சக்தி கணேஷ், சுகன்யா, சுஜந்தன், சுபாஷ்ராவ், சுபணா, சுபராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [22-04-1990] ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு இணுவில் பூவோடை மயானத்திற்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவி இல்லம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
அ. அருள்நாதன் [மகன்]
[3343]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org